2012 மே 11]

(பட்டியல் 4)

1—

மரப்பாலம்

வினா எண் 125—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி மரப்பாலம் பள்ளத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி வட்டம் மற்றும் நகரம் மரப்பேட்டை பள்ளம் என்று அழைக்கப்படும் டவுன் சர்வே வார்டு A, பிளாக் 16, டவுன் சர்வே எண் 782/2, ஓடைப்புறம்போக்கில் 782/3,4,5,6 என உட்பிரிவு செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டா இல்லாமல் (சுடுகாட்டுப்பள்ளம் பகுதி) சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்படி நபர்களுக்கு மாற்று இடம் வழங்க தகுதியான இடம் பொள்ளாச்சி நகரப் பகுதியில் நத்தம் புறம்போக்கில் இல்லை. மேற்படி பகுதியில் வசிப்பவர்கள் தொண்டாமுத்தூர் செல்ல சம்மதம் தெரிவித்தால், பொள்ளாச்சி வட்டம், தொண்டாமுத்தூர் கிராமம், வீட்டுமனைக்காக நில எடுப்பு செய்யப்பட்ட புல எண்கள் 252/6C, 255/1B, 129A/2A1, 129B1A(b), 130/1A1 ஆகியவற்றில் உள்ள காலியிடங்களில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

நிலம் வழங்குதல்

வினா எண் 6054—திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட நவல்பட்டு ஊராட்சியில் பர்மா அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண் 310/1-ல் 68 ஏக்கர் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், நவல்பட்டு கிராமம், புல எண் 310/1-இல் உள்ள 343.38.0 ஹெக்டேர் பரப்பளவு நிலம், கிராம கணக்குகளில் தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், காவலர் வீட்டு வசதி வாரியம், சமத்துவபுரம், காவலர் பயிற்சிப் பள்ளி போன்றவற்றிற்கு தடையாணையிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், பர்மா அகதிகளுக்கு நில ஒப்படை வழங்க ஏதும் இல்லை.

3—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6548—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஈச்சனேரி, கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், கழவன்குளம் குரூப் ஈச்சனேரி கிராமத்தில் தகுதியான நத்தம் காலிமனை இடம் ஏதுமில்லை என்பதால், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை.